இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 138 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 13 – ஞாயிற்றுக்கிழமை 28 டிசம்பர் 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 138 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 13 - Sunday 28 December 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.12.2025) கள்ளக்குறிச்சி மாவட்டம், வீரசோழபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 341 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவிலான 2559 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 386 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 62 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தே.மலையரசன், து.ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் தா.உதயசூரியன், வசந்தம் க. கார்த்திகேயன், ஏ.ஜெ. மணிக்கண்ணன், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி புவனேஸ்வரி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சிறப்புக் கவனம் செலுத்தப்படும் – கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு 8 புதிய அறிவிப்புகள்!

# ‘திராவிட மாடல்’ அரசு - மக்கள் போற்றும் சாதனைத் திட்டங்களின் அரசு!

## கள்ளக்குறிச்சி அரசு விழாவில் அடுக்கடுக்கான ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமித உரை!

**கள்ளக்குறிச்சி, டிச. 28 -**

**“சிறப்புக் கவனம் செலுத்தப்படும் கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு 8 புதிய அறிவிப்புகள்” என்றும் “திராவிட மாடல் அரசு மக்கள் போற்றும் சாதனைத் திட்டங்களின் அரசு” என்றும் கள்ளக்குறிச்சி அரசு விழாவில் அடுக்கடுக்கான ஆதாரங்களைச் சுட்டிக் காட்டி உரையாற்றிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.12.2025) கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு விழாவில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-

உங்களால் தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆகியிருக்கக்கூடிய நான் உங்கள் ஸ்டாலினாக உங்களை சந்திக்க வந்திருக்கிறேன்.

கல்வராயன் மலையின் கம்பீரமும், கோமுகி அணை, மணிமுக்தா அணைகளின் எழிலும், பெரியார், சிறுக்கலூர், மேகம் அருவிகளின் குளிர்ச்சியும், திருநறுங்கொண்டை போன்ற தலங்களின் ஆன்மீகமும் நிறைந்த கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு நலத்திட்ட விழாவில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமைப்படுகிறேன்.

**எந்தப் பணியையும் நூறு சதவிகிதம் அல்ல – 200 சதவிகிதம் செய்து முடிப்பவர் எ.வ.வேலு!**

உங்கள் மாவட்டத்திற்கான புதிய ஆட்சியர் கட்டட திறப்பு விழா; உள்ளிட்ட 341 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்,



2 ஆயிரத்து 559 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும், 386 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 62 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், பல்வேறு துறைகளின் சார்பில், மொத்தம் 2 இலட்சத்து 16 ஆயிரத்து 56 பயனாளிகளுக்கு ஆயிரத்து 45 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்குதல் என்று இந்த விழா ஒரு முப்பெரும் விழாவாக, மிக பிரமாண்டமாக ஏற்பாடு செய்திருக்கின்ற இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் செயல்வீரர் எ.வ. வேலு அவர்களை பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன்.

எந்த வேலையை வழங்கினாலும், அதை 100 சதவிகிதமல்ல, அதை 200 சதவிகிதம் சிறப்பாக செய்யக்கூடியவர். அவரைப் பொறுத்தவரைக்கும், ஒரு கண்ணில் வெண்ணெய் - மற்றொரு கண்ணில் சுண்ணாம்பு என்று வேறுபாடு காட்டாமல், அவருடைய திருவண்ணா மலை மாவட்டத்தைப் போலவே, இந்த கள்ளக்குறிச்சி மாவட்ட வளர்ச்சியிலும் அக்கறை காட்டக் கூடியவர்.

அவருக்கு துணையாக இருக்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் - வசந்தம் கார்த்திகேயன், உதயசூரியன் - அதேபோல, சிறப்பாக செயல்படக்கூடிய மாவட்ட ஆட்சியர் பிரசாந்த், கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு அதிகாரிகள் ஆகிய அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

**மக்களை நேரில் சந்திக்கும் திறன் கொண்ட அரசு இந்த அரசு!**

திராவிட மாடல் அரசு என்பது சாதனைத் திட்டங்களின் அரசு. சிலர் வாயிலேயே வடை சுடுகிறார்களே, அவர்களைப் போல இந்த அரசு அல்ல. மக்களுக்கு நேரடியாக பயன் தரக்கூடிய திட்டங்களை நிறைவேற்றி, மக்களை நேரடியாக சந்திக்கின்ற திறன்கொண்ட அரசு, இந்த அரசு.

நம்முடைய அரசு கடந்த நான்கு ஆண்டுகளில், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் நிறைய இருக்கின்றது. சில முக்கியமான திட்டங்களை மட்டும் தொகுதிவாரியாக தலைப்புச் செய்தியாக சொல்ல விரும்புகிறேன்.

கள்ளக்குறிச்சியில், அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை நாகலூரில், அங்கன்வாடி கட்டடம் பிரிதிவிமங்கலத்தில், சுற்றுலா மாளிகை சித்தலூர் கிராமத்தில், மணிமுக்தாறு குறுக்கே உயர்மட்ட பாலம், ரிஷிவந்தியம் தொகுதியில், ரிஷிவந்தியம் கல்லூரிக்கு புதிய கட்டிடங்கள் புதிதாக தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம் பிள்ளையார் குப்பம் பரமநத்தம் வரை குடிநீர் இணைப்பு வசதி - கள்ளிப்பாடியில், அங்கன்வாடி மையக் கட்டடம் மணலூர் பேட்டை பேரூராட்சிக்கு புதிய அலுவலகக் கட்டடம் - மூங்கில் துறைப்பட்டு - வாளவச்சனூர் இடையே தென் பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்.

அடுத்து, சங்கராபுரம் தொகுதியில், சங்கராபுரம், சின்னசேலம் அரசு மருத்துவமனைகளில் புதிய கட்டிடங்கள் மணியார் பாளையம், பொய்க்குணம் ஆகிய ஊர்களில் அங்கன்வாடி மையம், வெள்ளிமலை கொட்டப்புத்தூர் இடையே சாலைப்பணிகள் சங்கராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் ரங்கநாதபுரம் கிராமத்தில், கிராம அறிவு மையம் கச்சிராயபாளையம் மற்றும் கீழ்நிலவூரில், பொது சுகாதார வளாகம் சின்னசேலம், மூக்கனூர், வெள்ளிமலை, காட்டவனஞ்சூர், மூயம்பாடி, பரங்கிநத்தம், வாரம், மதூர் ஆகிய கிராமங்களில், துணை சுகாதார நிலையக் கட்டடங்கள் மற்றும் கல்படை பரங்கிநத்தம் இடையே கல்படை ஆற்றின் குறுக்கே, பொய்க்குணம் ஜவுளிக்குப்பம் சாலையில், உயர்மட்ட பாலம்.

உளுந்தூர்பேட்டை தொகுதியில், உளுந்தூர்பேட்டை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆலங்குப்பம், கொத்தனூர் ஊராட்சியில், இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கிறது. களமருதூரில், துணை மின் நிலையம் அரசூர், செங்குறிச்சி வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு - திருப்பெயர் தக்கா, நத்தாமூர், திருநாவலூர், சிக்காடு கிராமங்களில், கால்நடை மருந்தகம் இவ்வளவும் செய்து முடித்த பணிகள். மக்களுடைய பயன்பாட்டிற்கு சென்றிருக்கக்கூடிய பணிகள்.

இவை தவிர, தற்போது பணிகள் நடைபெற்று விரைவில் தொடங்கப்படவுள்ள திட்டங்களை நான் சொல்ல வேண்டும். அதையும் சுருக்கமாக சொல்கிறேன்.

> **“எம்மதமும் சம்மதம் என்கின்ற தமிழ்நாட்டு மக்களின் இந்த ஒற்றுமை, நல்லிணக்கம்தான் மதவாத அரசியல் செய்து மக்களைப் பிளவுபடுத்த நினைக்கின்ற, பா.ஜ.க.வின் கண்களை உறுத்திக் கொண்டே இருக்கிறது! அவர்கள் எத்தனை அடிமைகளை சேர்த்துக் கொண்டு அந்தர் பல்டி அடித்தாலும் சரி, ஒற்றுமையாக வாழுகின்ற தமிழ்நாட்டு மக்களிடம் மதவெறியை தூண்ட முடியாது. இந்த ஸ்டாலின் இருக்கின்ற வரைக்கும், எங்கள் திராவிட மாடல் அரசு இருக்கின்ற வரைக்கும், உங்களுடைய மதவெறி ஆட்டத்திற்கு இங்கே இடம் கிடையாது.”**

**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**

---

### டெல்லியில் – ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழக வினாத்தாளில்

## இஸ்லாமியர்களுக்கு எதிரான கேள்வி இடம் பெற்ற விவகாரம்!

### பேராசிரியரை இடைநீக்கம் செய்து நடவடிக்கை!

*புதுடெல்லி, டிச. 28-*

*டெல்லியின் ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தின் வினாத்தாளில், இஸ்லாமியர்களுக்கு எதிரான கேள்வி இடம் பெற்ற விவகாரத்தில் பேராசிரியரை இடைநீக்கம் செய்து ஒன்றிய கல்வியமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது.*

*ஒன்றிய அரசின் பல்கலைக்கழகங்களில் ஒன்றாக இருப்பது ஜே.எம்.ஐ. பல்கலைக்கழகமாகும். சிறுபான்மை அந்தஸ்து பெற்ற இந்த பல்கலைக்கழகத்தின் இளநிலை மாணவர்களுக்கு பருவ தேர்வு நடைபெற்று வருகிறது. பி.ஏ. ஹானர்ஸ் சமூகப்பணி பிரிவின் ஒரு கேள்வித் தாளில், 15 மதிப்பெண்ணுக்கான ஒரு கேள்வியும் இடம் பெற்றிருந்தது. அதில், பொருத்தமான எடுத்துக் காட்டுகளுடன் இந்தியாவில் உள்ள இஸ்லாமியர்களுக்கு, சிறுபான்மையினருக்கு எதிரான அட்டூழியங்களை பற்றி விவரிக்கவும் என கேட்கப்பட்டிருந்தது. இந்த கேள்வி பாடங்களுக்கு எந்த வகையில் தொடர்புடையது என சமூகவலைதளங்களில் கேள்விகள் எழுந்தன.*

*இதையடுத்து, அந்த கேள்வித்தாளை தயாரித்த பேராசிரியர் வீரேந்திர பாலாஜி பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.*

*மேலும், இந்த விவகாரம் குறித்து விசாரிக்க பல்கலைக்கழகம் ஒரு விசாரணை குழுவையும் அமைத்துள்ளது. அக்குழு தனது அறிக்கையை சமர்ப்பிக்கும் வரை, பேராசிரியர் பாலாஜியின் இடைநீக்கம் தொடரும் எனவும் ஜேஎம்ஐ பல்கலைக்கழக நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.*

---

### 2026ஆம் ஆண்டுக்கான முதல் கூட்டத் தொடர்:

## தமிழ்நாடு சட்டப்பேரவை ஜனவரி 20ஆம் தேதி கூடுகிறது!

### பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவிப்பு!

**சென்னை, டிச. 28 -**

**ஆளுநரின் உரையுடன் ஜனவரி 20ல் சட்டப்பேரவைக் கூட்டம் தொடங்குகிறது என சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்துள்ளார்.**

2026ஆம் ஆண்டுக்கான முதல் சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் ஜனவரி 20ஆம் தேதி ஆளுநர் உரையுடன் தொடங்கும் என்று பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவித்துள்ளார்.



சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் “ஜனவரி 20ஆம் தேதி ஆளுநர் உரையுடன் தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் தொடங்கும்” என்றும் “தமிழ்நாடு அரசு தயாரித்து தரும் உரையை ஆளுநர் சட்டப்பேரவையில் வாசிப்பார்” என்றும் கூறினார்.